JETIR.ORG ISSN: 2349-5162 | ESTD Year : 2014 | Monthly Issue
JOURNAL OF EMERGING TECHNOLOGIES AND INNOVATIVE RESEARCH (JETIR)
An International Scholarly Open Access, Peer-reviewed, Refereed Journal

# தமிழியலுக்கு நவீனக் கோட்பாடுகளின் தேவையும் அவற்றின் பயன்மதிப்பும்: சிலப்பதிகாரத்தை முன்வைத்து ஓர் அறிமுகம்

**(Need of modern theories and their utility in Tamilology: An introduction with Silapathikaram)**

**க.சசிகலா,**

**முனைவர் பட்ட ஆய்வாளர்,**

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,**

**தரமணி, சென்னை – 113.**

***Abstract:*** It has to be realized that there is no theorizing in the ancient Tamil tradition to find out what the entire theoretical construct of a literature is working in the social, religious, cultural and economic conditions. Therefore, this article seeks to explain that modern theories with socio-historical foundations help us to complete its inadequacy. In particular, this article aims to provide an introduction to how the findings obtained from a systematic theoretical approach can be interpreted in a socio-historical context.

***IndexTerms* – Tamil tradition, Silapathikaram, Modern theories, Tamilolgy, Structuralism.**

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகளவில் கலை, இலக்கியத் திறனாய்வுப் போக்குகளில் குறியியலும் அமைப்பியலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின. கோட்பாடுகளைக் கருவிகளாகக் கொண்டு நவீன இலக்கியங்களை உரையாடுவதற்கு இந்நேர்வுகள் காரணமாக அமைந்தது. இதன் தொடர்ச்சியாக நவீனத்துக்கு முந்தைய (Premodern) பண்டைய இலக்கியங்களுக்குப் புதிய புதிய பொருள்கோடல் செய்யும் வாய்ப்புப் பரிசோதித்துப் பார்க்கப்பட்டது. தமிழ்த் தொல் இலக்கணக் கோட்பாடுகளின் வாயிலாக, எழுத்து, சொற்கள், சொற்பொருண்மை, சொற்களின் இணைவு, இரண்டு சொற்களை அல்லது இரண்டு தொடர்களை இணைத்துப் பொருள் கொள்ளும் முறை சாத்திமாக உள்ளது. உரையாசிரியர் மரபில் ஓர் இலக்கிய ஆக்கத்தின் ஒட்டுமொத்தக் கருத்துத் தொகுதியை உள்ளது உள்ளபடி ‘திரண்ட கருத்து’ எனும் பொருண்மையில் சாராம்சமாகச் சுட்டியிருப்பதைப் பார்க்க முடிகிறது.

ஆனால் ஓர் இலக்கியத்தின் ஒட்டுமொத்தக் கருத்துத் தொகுதியும் சமூக, சமய, பண்பாட்டு, பொருளியல் நிலையில் என்னவாகத் தொழிற்பட்டு நிற்கின்றன என்பதைக் கண்டறியத் தொல் தமிழ் மரபில் கோட்பாட்டாக்கங்கள் இல்லை என்றே உணர வேண்டியுள்ளது. எனவே அதன் போதாமையை நிறைவு செய்ய சமூக வரலாற்று அடிப்படைகளைக் கொண்ட நவீனக் கோட்பாடுகளே நமக்குத் துணைபுரிகின்றன என்பதையே இக்கட்டுரை விளக்க முற்படுகிறது. குறிப்பாகச் சிலப்பதிகாரத்தை அமைப்பியல் கோட்பாட்டு நோக்கில் அணுகினால் பெறக்கூடிய

அடைவுகளை சமூக வரலாற்று நிலையில் எப்படி அர்த்தப்படுத்த முடியும் என்பதான அறிமுக நிலையையும் இக்கட்டுரை எடுத்துக்காட்ட விழைகிறது.

**தமிழ் மரபில் அமைப்புச் சிந்தனை**

தமிழ் இலக்கிய மரபில் அமைப்பு எனும் கூறு பற்றிய சிந்தனைகள் குறித்த ஓர்மை இருந்திருக்கிறது. ஆனால் முறைப்படுத்தப்பட்ட ஒத்திசைவான கோட்பாடாக அவை முன்வைக்கப்படவில்லை. “தொல்காப்பியர் பூக்களின் அடிப்படையில் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) நிலங்களை வகைப்படுத்தி, அந்நிலங்களை அடிப்படையாகக்கொண்டே மானிட ஒழுக்கங்களைத் திணைகளாக அமைத்திருப்பதில் அமைப்பியச் சிந்தனை தெரிகிறது. இவ்வாறே அகம் - புறம் என்னும் துருவ இணைகளை எல்லா இடங்களிலும் நிரம்பிய ஒன்றாகக் கையாளுவதிலும் அமைப்பியச் சிந்தனை உள்ளது.

அகத்திணைகள் ஏழினுக்கும் புறத்திணைகளைத் துருவ இணைகளாக அமைத்திருப்பதிலும் அவரது அமைப்பியச் சிந்தனை தெரிகிறது. எழுத்ததிகாரத்தில் நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல் ஆகிய மூன்று இயல்களைப் பொதுநிலையிலும் இதற்கு முரணாக, அடுத்து வரும் ஆறு இயல்களைப் புணர்ச்சிக்கெனவும் அமைத்திருப்பதில் முதல் வேற்றுமைக்கும் – பின்னர் சொற்களின் அமைப்பிற்கும் உரிமை தந்து இயல்களை அமைப்பதிலும் அமைப்பியச் சிந்தனையைக் காணலாம்.”[1] இந்தத் திட்டமிட்ட அமைப்பு முறைகள் ஒவ்வொன்றும் தம்முள் தாமாகவே உறவுடையன அல்ல; மாறாக, அவை புலப்படுத்தும் நடைமுறை உறவுகளே அவற்றின் பொருண்மைகளை வெளிப்படுத்தி, அர்த்தப்பாடுகளாக அமைகின்றன என்பதை அமைப்பியலே விளக்குகிறது.

பழந்தமிழ் இலக்கியங்களில் அவ்வாறான உறவாகவோ, முரணாகவோ தொழிற்படும் கருத்துப் புலப்பாடுகளைக் கண்டறிய அமைப்பியல், பின்அமைப்பியல், நவீனத்துவம், பின்நவீனத்துவம், பின்காலனியம் போன்ற புதிய புதிய கோட்பாடுகள் நிகழ்காலத்தில் நமக்குப் பயன்படுகின்றன. அந்த வகையில் சிலப்பதிகாரத்தின் அமைப்பில் ஒவ்வொன்றும் உறவுத்தொடராக நீளும் தொடர்நிலைச் செய்யுளாக இருப்பினும் நடைமுறை உறவாகக் கட்டமைப்பட்ட கருத்துத் தொகுதிகளின் தொடர்ச்சியைக் குறிப்பிட்ட பொருண்மை நிலையில் (உள்ளடக்கம்) புரிந்துகொள்வதற்கு நமக்கு அமைப்பியல் கோட்பாடு பெரிதும் துணைபுரிகிறது.

**புதுப்புதுப் புலப்பாட்டுப் பொருண்மைகள்**

ஆசிரியன், திட்டமிட்டு இலக்கியத்தில் உருவாக்கிய புறவயமான மொழிக்கூறுகள் (யாப்பு, மொழி வளம், தொன்மைகள்) தெளிவாகப் புலப்பட்டாலும் அதன் அகவயமான (கருத்தலகுகள்) கூறுகள் இருண்மையாகவே கிடக்கின்றன. அதை அமைப்பியல் என்கிற புதுவெளிச்சம் பாய்ச்சிக் கண்டறிகிற போது, புதுப்புதுப் புலப்பாட்டுப் பொருண்மைகளைக் கண்டறிய முடிகிறது. “அமைப்பியல், கட்டுமானத்தை மட்டும் ஆராய்வது அல்லது கருத்துருவங்களை மட்டும் ஆராய்வது என்று சொல்ல வேண்டும். நனவிலி நிலையில் மனிதனிடம் உருப்பெறும் எண்ணங்களையே அமைப்பியல் ஆராயும். அந்த எண்ணங்கள் சமூக நிறுவனங்களை எந்த மட்டத்தில் உருவாக்குகின்றனவோ, உருவாக்க முயலுகின்றனவோ அந்த மட்டத்தில் தான் அமைப்பியல் ஆய்வு சாத்தியம். அதாவது, மனிதன் தன் மொழி மூலம் உலகைப் புரிந்துகொள்ளக் கட்டுகின்ற

[1] க.பூரணச்சந்திரன், அமைப்பியமும் பின் அமைப்பியமும், ப.27.

கருத்து மாதிரிகள் மன அடித்தளத்தில் கிடக்கின்றன. அந்த மொழி மாதிரிகள்தான் அமைப்பியலின் ஆய்வுப் பொருள். அந்த வகையில் அமைப்பியல் முதல்முதலான, தெளிவான, ஒழுங்கான அறிதல் பற்றிய முயற்சி”[2] என்று வரையறுக்கப்படுவதைக் காண்கிறோம்.

இலக்கியத்தில் மொழி வாயிலாகப் புலப்படுத்தப்படும் சமூக நிறுவனங்களான சமயம், ஒழுகலாறுகள், பண்பாட்டு நடவடிக்கைகள், அதையொட்டிப் படைப்பாளரின் நனவிலி மனத்தின் வழியாக அதனுள் கட்டமைக்கப்படும் பாத்திரங்களின் கருத்துகள் போன்றவற்றை ஆராய்வதில் அமைப்பியலே திறனாய்வு உலகில் முதல் முயற்சி என்று அறியப்படுகிறது. ஏனெனில் இலக்கியம் படைப்பாளியின் மனத்திலிருந்து தானாகப் பொங்கி எழுவது மட்டுமல்ல; மாறாகக் குறிப்பிட்ட சமூகப் பண்பாட்டு நிலையில் ஏதேனும் ஒரு புறநிலை அழுத்தத்தினால் படைப்பாளியின் நனவிலி மனவெளிப்பாடாக இலக்கியம் அல்லது அது புலப்படுத்தும் கருத்து அமையும் என்றவாறு விளங்கிக்கொள்ள வேண்டும். இதையே “இலக்கியப் படைப்பு என்பது தூயதான ஒரு கண்டுபிடிப்பு அல்ல; இல்லாததிலிருந்து உருவாதல் அல்ல; வெளியில் திடீரென எழும் தோற்றம் அல்ல; ஒரு ‘தேவை’யிலிருந்து எழுவது. அதாவது தேவை உருவாக்கித் தரும் அடையாளமே இலக்கியம். பல முன்தீர்மானங்களின் மூலம் வளர்ந்து வருவதுதான் எழுத்து”[3] எனும் கூற்றிலிருந்து அறிய முடிகிறது. இப்படியான வாசிப்பு முறைமை அமைப்பியல் நமக்கு அளித்த கொடை என்றே கூற வேண்டும். இந்தத் திறனாய்வுக் கருத்தலகுகள், தொன்மை இலக்கியமாகியச் சிலப்பதிகாரத்தை அர்த்தப்படுத்துவதில் உருவாக்கிய பயன்மதிப்பு பொருட்படுத்தத்தக்கதாகும்.

**வாசகர் பொருண்மையின் நல்வாய்ப்புகள்**

சிலம்பின் மூன்று அடிக்கருத்துகள் ஏன் உருவாக்கப்பட்டன? அவற்றின் அன்றைய சமூகத் தேவை என்ன? சமய மெய்யியல் நிலையில் அது எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது? மக்கள் வழக்காறு என்னவாக இருந்தது? இளங்கோவடிகள் அதற்கு முகங்கொடுத்து எவ்வாறு ஆக்கம் செய்தார்? அதன் இன்றைய மறுபயன்பாடு ஏன் நிகழ்கிறது? போன்றவற்றையெல்லாம் அமைப்பியல் கோட்பாட்டு வழிப்பட்ட வாசிப்பின் வாயிலாகக் கடுமையான உழைப்பின் மூலம் கண்டறிய முடியும்.

“இலக்கியத்தின் கருத்திற்கும் வடிவத்திற்கும் உள்ள தொடர்பினை ஒட்டுமொத்தமாகவும் பகுதியாகவும் கண்டு அப்பகுதிகளுக்கிடையேயுள்ள உறவுமுறைகளையும் கணிப்பது குறிப்பிட்ட இலக்கிய வகையின் கட்டமைப்பினைப் புலப்படுத்தும்”[4] என்கிற கூற்று இலக்கியத்தின் உள்ளார்ந்த உறவுநிலை அமைப்பை அறிந்துகொள்ள வேண்டிய தேவையை வலியுறுத்துகிறது. திட்டமிடப்பட்டும் நனவிலி மனத்திலிருந்தும் எழும் உணர்வுகள் எழுத்து என்கிற மொழிநிலைப்படுத்தப்படும் போது, ஆசிரியனுக்கும் பனுவலுக்குமான உறவாக நிற்கிறது. அதுவே வாசகருக்குச் செல்கிற போது, ஆசிரியர் என்பவரின் உணர்வுநிலை மாறி, வாசகரின் உணர்வுநிலையே அந்தப் பனுவலைப் பொருண்மையாக்கம் செய்வதில் தீர்மானகரமானது என்ற அடைவே அமைப்பியலின் சிறப்பு வாய்ந்த கூறாகும். ஏனெனில் “மொழி என்பது ஆழமும் சிக்கலும் நீண்ட வரலாறும் உடையது. ஆதலால், மேலும் மேலும் புதிய புதிய அர்த்தங்களை – அந்த அந்த

[2] தமிழவன், அமைப்பியலும் அதன் பிறகும், ப.233.
[3] மேலது, ப.264.
[4] இராம.குருநாதன், ப.முத்துக்குமாரசாமி, சிலப்பதிகாரம் ஆய்வுக்கோவை, ப.289.

வாசகனின் வாசிப்பு முறைக்கும் (Reader's Text) அனுபவத்திற்கும் ஏற்ப அது தருகிறது. எனவே, வாசகனும் வாசிப்புமுறையும் அமைப்பியலில் மிக முக்கியமாகும்''[5] என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

வாசகரின் நோக்கில் பொருள்கோடல் மாறுபடும் இந்த நிலையை அமைப்பியல் தவறவிட்டதாலேயே அது மீயமைப்பியலாக (அ.அ.மணவாளன் சொல்லாடல்) மாறிப் பரிமாணம் பெறுகிறது என்பதையும் அறிய முடிகிறது. வாசகரின் கருத்துத் தேவை என்னவாக இருக்கிறது என்பதை அடியொற்றியே வாசிப்பும் அமையும். ஏனெனில், "மொழி என்பது உடன்காலப் பண்பாட்டோடும் கால மாறுதல்களோடும் தொடர்புடையது. எனவே காலத்தின் செல்வாக்கு கவிதையியலை மாற்றச் செய்யும் என்னும் உண்மையை அமைப்பியலாளர்கள் புறக்கணித்துவிட்டனர்.

இப்புறக்கணிப்பு அமைப்பியல் வாதத்தின் இருவேறு குறைகளுக்கு இடமளித்துவிட்டது. அதாவது, மனித மனம் தான்தோன்றியன்று; சமுதாயத்தால் உருவாக்கப்படுவது என்பதைக் கொள்கையாக ஏற்றுக்கொண்ட அமைப்பியலார், காலத்திற்கேற்பச் சமுதாயம் மாறுதலடைவதையும், அதற்கேற்ப மனித மனம் உருவாக்கம் பெறுவதையும் கணக்கிற்கொள்ளாமல் விட்டுவிட்டனர். அதனால் படைக்கின்ற படைப்பாளியின் மனமும், படைப்பை ஏற்றுக்கொள்ளுகின்ற வாசகனின் மனமும் கால அடைவில் மாறுதல் அடைவதைக் கவனிக்காமல் அல்லது அம்மாற்றத்தை ஒரு பொருட்டாக எண்ணாமல் விட்டுவிட்டனர். எனவே படைப்புகள் அடிச்சட்டக அமைப்பின் தன்மையால் தாமே பொருள்தரும் என்ற தவறான முடிவுக்கு வந்தனர்.

ஏனெனில், அமைப்பியலார் தாம் கருதும் கவிதையியல் கூறுகளான இலக்கிய வகைமை, இலக்கிய உத்திகள், இலக்கியப் பொருண்மை என்பனவற்றை புறமைப் பொருளாகக் (Objective entities) கருதிவிட்டனர். மொழியின் கூறுகளாக, மொழியால் வெளிப்படுத்தப்பெறும் இக்கூறுகள் வாசகனின் சூழலுக்கேற்பப் பொருள்படுவன என்னும் வாசகக் கோட்பாட்டுச் (Theories of reading) சூழலை இவர்கள் அறவே ஒதுக்கிவிட்டனர். ஆனால் அதில் மக்களாட்சி யுகம் தோன்றாத நிலையும் நினைவு கூரத்தக்கது. அதனால் இலக்கியப் பயனும் புறக்கணிக்கப்பட்டது. விளைவாக இலக்கிய மதிப்பீடும் இவர்களுடைய கோட்பாட்டு எல்லைக்குள் இடம் பெறவில்லை.

மனித மனத்தின் தனித்தன்மையை அல்லது சூழலுக்கேற்ப வேறுபடும் மனப்பாங்கினைப் புறக்கணித்த காரணத்தால் இவர்களுடைய இலக்கியக் கோட்பாடுகள் பெரும் எதிர்ப்புகளுக்கு உள்ளாயின. மீயமைப்பியல் வாதிகள் படைப்பாளியின் ஆளுமை பற்றி மிகுதியாகக் கவலைப்படவில்லையாயினும் வாசகர்களின் இன்றியமையாமையை மிகுதியாக வற்புறுத்துகின்றனர்.''[6] பின்அமைப்பியல் வலியுறுத்தும் வாசகரின் நோக்கு என்பது ஒரு படைப்பைச் சமகாலத்தின் பொருத்தப்பாட்டோடு வாசிக்க இடமளிக்கும் வாய்ப்பை வழங்கக்கூடியது. அதுவே அந்தப் படைப்பின் இருப்பை எல்லாக் காலத்திற்கும் ஏற்றதாக மாற்றும் என்பதாலேயே வாசகர் நோக்கை முதன்மைப்படுத்துவதை அறிய முடிகிறது.

சிலப்பதிகார ஆய்வுகளுமே இவ்வாறு வாசகரின் தேவைக்கேற்ப ஒவ்வொரு காலத்திலும் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. வட வைதீகம் (சநாதனம்), தென் வைதீகம் (சைவம், வைணவம்),

---

[5] தி.சு.நடராசன், திறனாய்வுக் கலை, ப.215.

[6] அ.அ.மணவாளன், இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள், ப.87.

தேசிய இயக்கம், திராவிட இயக்கம், பெண்ணியம் போன்ற பல்வேறு நோக்குகளில் ஆராயப்பட்டுள்ளது. இன்றைக்குச் சிலப்பதிகாரத்தை ஓர் இந்து வைதீகக் கட்டுக்குள் அடக்க முற்படும் நிலையில் அமைப்பியல், பின்அமைப்பியலின் துணையோடு அதன் மெய்யான சமய மெய்யியல் நிலையைத் தெளிவாகக் கண்டறிய இயலும்.

**எதிர்நிலையும் ஒத்திசைவும்**

சிலப்பதிகாரத்தின் அமைப்பு என்ற வகையில் அணுகும் போது அதன் சமூக அமைப்பு குறித்தும் அறிந்துகொள்ள வேண்டிய தேவை ஏற்படுகிறது. பொதுவாக வரலாற்றில் சமூக அமைப்பின் இயங்கியலை மார்க்சியம் நான்கு படிநிலைகளாக விளக்கும். அவை ஒன்றுக்கொன்று முரணாக அமையும் சமூக அமைப்பை இதற்கு முன்னரே ஹெகலின் எடுத்துரைப்புகள் இயங்கியல் நோக்கில் விளக்கின என்கிறார், ஈழத்து ஆய்வாளர் சி.மௌனகுரு. “அமைப்பியல் வாதம் எல்லாவற்றையும் ஓர் அமைப்பாகக் கண்டது. அமைப்பியல் வாதத்தின் முதல்வர் லெவிஸ்ராஸ் ஆவர். கட்டவிழ்ப்பு பற்றி விளக்கியவர்களுள் முக்கியமானவர்கள் தெரிதாவும், பூக்கோவும் ஆவர். தெரிதா அனைத்துச் செயற்பாடுகளுக்கும் ஆதாரம் அதிகாரமே என்றார். பூக்கோ கட்டுடைத்து அதிகாரத்தை இனம் கண்டார்.

இதற்கு முன்னரே சமூக அமைப்பின் இயங்கியலை ஹெகல், ‘இருக்கும் நிலை’ (Thesis) எதிர்நிலை (Anti thesis) பின் இரண்டிலிருந்தும் உருவாகும் இணைநிலை (Synthesis) பின் அதற்கு எதிர்நிலை என இயங்கியல் ரீதியில் விளக்கினார்”[7] என்கிறார். ஆனால் ஹெகல் கூறும் சமூக அமைப்பில் இணைநிலை என்பது ஒன்றுக்கொன்று ஒத்திசைவு என்பதை முதன்மையாகக் கொண்ட இயங்காவியல் போக்கை அடிப்படையாகக் கொண்டது. இது இயங்கியல் நோக்கில் சமூக அமைப்பை விளக்கும் மார்க்சியத்திற்கு மாறானது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதுவே சிலம்பை வைத்துப் பார்க்கும் போது அரச மரபு, வணிக மரபு என்கிற இணையும், திணைக்குடி மரபும் ஒன்றல்ல என்பதாகப் பார்க்க வேண்டும். ஒத்திசைவான இணைநிலை எனில், திணைக்குடியில் தலைமை வகிப்பவரும் வேந்தரும் ஒரே நிலை என்ற முடிவிற்கு வர வேண்டியிருக்கும்.

தமிழியலில் பல்வேறு திறனாய்வு அணுகுமுறைகள் அமைப்பியல் என்கிற பொருண்மையிலேயே பயன்படுத்தப்படுகின்றன. அதன் சொற்பொருண்மையை மட்டும் வைத்துக்கொண்டு அவ்வாறான போக்கைக் கடைப்பிடிக்கின்றனர். ஆய்வு முறைகளில் பகுப்பாய்வு நிலையில் நிரல்படுத்தப்படும் கருத்துகளைத் தொகுத்து விளக்கும் போது அது விளக்கமுறைத் திறனாய்வாக நின்றுவிடுகிறது. இதுவும் அமைப்பியலும் ஒன்றல்ல. மாறாகக் “கட்டமைத்தல் (construction), கட்டவிழ்ப்பு (deconstruction), மீள்கட்டமைப்பு (reconstruction) என்ற பதங்களின் அர்த்தங்களைப் புரிந்துகொள்வது அவசியம், ஏதோ ஒரு தேவை கருதித் திட்டமிட்டு உருவாக்கப்படுவதைக் கட்டமைத்தல் எனலாம். சட்டங்கள், சம்பிரதாயங்கள், சடங்குகள், கருத்து நிலைகள் யாவும் கட்டமைக்கப்படுகின்றன. கட்டமைப்பு வாதம் எனப்படும் ஸ்டக்சரலிஸம் இக்கட்டமைப்பை விளக்குகிறது”[8] என்கிற முடிவிலிருந்து அமைப்பியல் – கட்டமைப்பு – கட்டுடைப்பு – பின் அமைப்பியல் – மீயமைப்பியல் – கட்டவிழ்ப்பு என அனைத்துச்

[7] சி.மௌனகுரு, தமிழக வரலாறும் பண்பாடும் (தெரிந்ததும் தெரியாததும்), ப.14.
[8] மேலது, ப.13.

சொல்லாடல்களுமே கட்டமைப்புவாதமாக அமைப்பியல் என்பதற்குள் தொடங்கித் தன்னளவில் நீட்சியடையக் கூடியது என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

தமிழியல் சூழலில் அமைப்பியல் கோட்பாட்டிற்கு நிலையான (Standardization) சொல்லாடல் இல்லாமல் பல்வேறு சொல்லாடல்களில் பயன்படுத்தப்படுவதால் குழப்பம் நீடிக்கிறது. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அமைப்பியல் கோட்பாடானது இயங்கியலாக வளர்ச்சி பெறுவதால் இந்தச் சொல்லாடல் இப்படியான மாற்றங்களைச் சந்தித்து வந்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது. “கட்டமைக்கப்பட்ட விதத்தினைப் புட்டுக்காட்டி, அவிழ்த்துக்காட்டி அல்லது உடைத்துக்காட்டி, யாரால் இது கட்டமைக்கப்பட்டது அதன் உள்நோக்கம் என்ன? என்பதை வெளிப்படுத்துதல் கட்டவிழ்ப்பு அல்லது கட்டமைப்புவாதம் எனப்படும் deconstruction ஆகும்”[9] என்கிற கூற்று இன்னும் தெளிவான வரையறையை முன்வைக்கிறது.

**கட்டவிழ்ப்பு X அச்சத்தின் வெளிப்பாடு**

ஓர் இலக்கியத்தை ஏன் இவ்வாறான கட்டவிழ்ப்பு செய்ய வேண்டும் என்கிற கேள்வி எழலாம். ஒவ்வோர் இலக்கியமும் ஒவ்வொரு காலத்திலும் வெவ்வேறு கருத்துநிலைகளில் வாசிக்கப்பட்டது. அப்படியான பல்வேறு கருத்துநிலைகளுக்கான சாத்தியங்களை உள்ளடக்கியதே கட்டவிழ்ப்பு செய்யத் துணைபுரியும் கட்டமைப்பு வாதம் என்றால் மிகையாகாது. குறிப்பாகச் சிலப்பதிகாரம் ஒவ்வொருவருக்கும் ஏற்ற வகையில் வாசிக்கப்பட்டுள்ளது. இந்திய விடுதலை இயக்கம், சைவ சமய மறுமலர்ச்சி, திராவிட இயக்கம், சாதியத்தின் மீள்எழுச்சி ஆகியவை சார்ந்து பல்வேறு வகைகளில் விளக்கப்பட்டுள்ளது. இவையே கலை, இலக்கியத்தளத்தில் கோட்பாட்டாங்களாக முன்வைக்கப்படுகின்றன.

“இலக்கியம் என்பது ஒரு கலாச்சார உற்பத்திப் பிரதியாகவே இவற்றில் நோக்கப்படுகிறது. சமூக அமைப்பினைக் கட்டுப்படுத்தும் கட்டுமானங்களில் ஒன்றாகவும், கலாச்சார உற்பத்தி விளைபொருளாகவும் ஒரே சமயத்தில் இலக்கியம் இயங்குவதனால், கலாச்சாரம் பற்றிய ஆய்வின் ஒரு பகுதியாகவே இலக்கிய விமரிசனம் இருந்த காலம் மலையேறிப் போய்விட்டது. மாறாக, கலாச்சாரம் பற்றிய ஆய்வு, அதன் கட்டுமானங்கள் பற்றிய ஆய்வு, அதன் தளைப்படுத்தும் அம்சங்கள் பற்றிய ஆய்வாக இலக்கிய ஆய்வு மாறிவிட்டது. இந்நிலையில் அமைப்பிய, பின் அமைப்பியச் சிந்தனைகள் அதிமுக்கியத்துவம் பெறுகின்றன. எனினும் இச்சிந்தனைகள், முக்கியச் சிந்தனைகளோடும் தம்முள்ளும் கொண்டிருப்பதாகக்கூறும் தொடர்ச்சியின்மைகளைக் கவனித்து மதிப்பிட வேண்டும். இவற்றைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற விமரிசன மனப்பான்மை அவை எழுப்புகின்ற வினாக்களுக்குப் பதிலளிக்காமலும் கண்ணை மூடிகொள்வதால் அல்லது அவற்றைக் கவனிக்காமலே புறக்கணிப்பதால் பயனில்லை. விழிப்புடன் மதிப்பிடலே நமது முன்னேற்றத்திற்கு வழி”[10] என்பதை உள்வாங்கிக்கொள்ள வேண்டும்.

ஏனெனில் தமிழ்ச் சூழலில் கல்விப் புலத்திற்குள் கோட்பாடு சார்ந்த ‘இலக்கியக் கட்டவிழ்ப்பு செய்யும் ஆய்வுகள் இலக்கியத்தின் தன்மையைக் குலைத்துவிடும்’ என்கிற புனித பிம்பம் தொடர்ந்து பேணப்படுகிறது. பழமையான இலக்கியங்களைப் பல்வேறு வகைமைகளில் புதிய பார்வைகளோடு அணுகும்போதே அந்த இலக்கியத்தின் சமகாலத் தேவையும் இருப்பும் தக்கவைக்கப்படுகிறது

---

[9] மேலது, ப.13.

[10] க. பூரணச்சந்திரன், மு.கு.நூ, பக்.12-13.

என்கிற நோக்கிலேயே புதிய புதிய கோட்பாடுகளை வைத்து ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறின்றி ஓர் இலக்கியத்திற்குப் புனிதத்தன்மை கற்பித்து, ‘புதிய கோட்பாடுகளைப் பழைய இலக்கியங்களின் மீது வைத்து அணுகுவது எப்படிப் பொருந்தும்’ என்கிற கேள்வியானது, குறிப்பிட்ட இலக்கியத்தின் உள்ளடக்கங்கள் குறித்த அச்சத்தின் வெளிப்பாடே என்பதை மறுக்க முடியாது. ஒருவேளை அப்படியான ஆய்வுகள் அதன் மெய்யான கருத்துத் தொகுதியைச் சிதைப்பதாக இருந்தால் அதற்கு எதிர்வினை ஆற்ற வேண்டுமேயொழிய அதைத் தடுக்கக்கூடாது.

எனவே அமைப்பியல் போன்ற கோட்பாடுகளின் துணைகொண்டு பண்டைய இலக்கியங்களில் புதையுண்டு கிடக்கும் சமய, சமூகப் பண்பாட்டுப் பொருளியல் நிலைகளைக் கண்டறிய வேண்டும். அவ்வாறு கண்டடைவதற்கு நவீனக் கோட்பாடுகளே நமக்குத் துணைபுரிகின்றன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**ஆய்விற்குப் பயன்பட்ட நூல்கள்:**


1. க.பூரணச்சந்திரன், அமைப்பியமும் பின் அமைப்பியமும், விரிவாக்கப்பட்ட இரண்டாம் பதிப்பு, அடையாளம், திருச்சி, 2009.
2. தமிழவன், அமைப்பியலும் அதன் பிறகும், மூன்றாவது மீளச்சு, அடையாளம் வெளியீடு, திருச்சி, 2019.
3. இராம.குருநாதன், ப.முத்துக்குமாரசாமி, சிலப்பதிகாரம் ஆய்வுக்கோவை, முதற்பதிப்பு, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-114, 2004.
4. தி.சு.நடராசன், திறனாய்வுக் கலை - கொள்கைகளும் அணுகுமுறைகளும், திருத்திய பத்தாம் பதிப்பு, NCBH, சென்னை, 2016.
5. அ.அ.மணவாளன், இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள், மூன்றாம் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 113. 2010.
6. சி.மௌனகுரு, தமிழக வரலாறும் பண்பாடும் (தெரிந்ததும் தெரியாததும்), குமரன் அச்சகம், கொழும்பு, 2005.